## நெடுஞ்சாலைப் பாலங்களுக்குரிய – மேற்கட்டுமானத்திற்கான

# தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள் அடங்கிய - 11 தொகுதிகள் கொண்ட புத்தகங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, ஜூலை 27-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.7.2024) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் நெடுஞ்சாலைப் பாலங்களுக்குரிய மேற்கட்டுமானத்திற்கான தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள், 11 தொகுதிகளாக மாநில நெடுஞ்சாலைத் துறையின் திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு, அலகினால் வடிவமைத்துத் தயாரிக்கப்பட்டுள்ள "STANDARD PLANS FOR HIGHWAY BRIDGES - RCCT BEAM AND SLAB SUPER STRUCTURE" என்ற புத்தகங்களை வெளியிட்டார்.**

அதன் விபரம் வருமாறு:-

நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குச் சாலை கட்டமைப்பு மற்றும் பாலங்கள் கட்டுமானம் மிகவும் அத்தியாவசியமானதாகும். சிறந்த தரம் மற்றும் இணைப்பு வசதியுடன் கூடிய சாலை கட்டமைப்பின் காரணமாக, இந்தியாவின் வளர்ச்சி அடைந்த மாநிலங்களின் முன்னணிப் பட்டியலில் தமிழ்நாடு இடம் பெற்றுள்ளது.

தமிழகத்தின் மொத்த சாலைகளின் நீளம் 2.71 இலட்சம் கி.மீ. இதில் 67,216 கி.மீ. நீளச் சாலைகள் மாநில நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிலும், 6,805 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகள், ஒன்றிய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. இதர சாலைகள் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. சாலை கட்டமைப்பின் ஒரு பகுதியாக, 1,39,287 பாலங்கள் மாநில நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகக் கட்டப்பட்டுப் பராமரிப்பில் உள்ளன.

மாநிலத்தின் அனைத்துத் துறைகளின் வளர்ச்சியையும் மேம்படுத்த மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட பாதுகாப்பான சாலை கட்டமைப்புத் தேவைப்படுகிறது. எனவே, தேவையான இடங்களில் முறையே ஆறுகளின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள், இரயில்வே கடவுகளில் மேம்பாலங்கள்/கீழ்பாலங்கள், பெருநகரம், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் சாலை மேம்பாலங்கள் மற்றும் உயர்மட்ட நீள் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

நெடுஞ்சாலைப் பாலங்களுக்குரிய, மேற்கட்டுமானத்திற்கான தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள் 1990, 1991 மற்றும் 1995ஆம் ஆண்டுகளில் ஒன்றிய அரசின் தரைவழி போக்குவரத்து அமைச்சகத்தால் (சாலை பிரிவு) வெளியிடப்பட்டன. பாலங்களின் கட்டுமான முறையில் ஏற்பட்ட பல்வேறு தொழில் நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் வடிவமைப்பில் பெற்ற அறிவுசார் அனுபவத்தால் வடிவமைப்பு முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இம்மாற்றங்களைப் பின்பற்றிப் பாலங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன, இதனால் பாலங்களுக்கான கட்டுமான மதிப்பீடு குறைந்துள்ளது. புதிய தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் இது வரை வெளியிடப்படவில்லை.

இவ்வரைபடங்களுக்கான தேவையை உணர்ந்து, தற்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையால், நெடுஞ்சாலைப் பாலங்களுக்குரிய, மேற்கட்டுமானத்திற்கான தரப்படுத்தப்பட்ட வரைபடங்கள், 11 தொகுதிகளாக மாநில நெடுஞ்சாலைத் துறையின் திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு, அலகினால் வடிவமைத்துத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றில், 10 தொகுதிகள் பல்வேறு வழித்தடங்கள்/சாலை அகலங்களுக்கான Reinforced Cement Concrete TBeam and Slab superstructure வரைபடங்கள் ஆகும். ஒவ்வொரு தொகுதியிலும் 12 மீட்டர் முதல் 30 மீட்டர் வரையிலான, 16 வகை நீளமுள்ள பால மேற்தள வரைபடங்கள் உள்ளன. ஆக மொத்தம் தற்போது, 160 வகையிலான பால மேற்தளத்திற்கான வரைபடங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

மீதமுள்ள ஒரு தொகுதி, 25 மீட்டர், 30 மீட்டர் மற்றும் 35 மீட்டர் நீளமுள்ள பல்வேறு வழித்தடங்களுக்கான Precast Prestressed Concrete Post Tensioned IGirder and Reinforced Concrete slab type Composite Super structure வரைபடங்கள் 9 வகைகளை உள்ளடக்கியது.

இத்தொகுப்புகளின் வெளியீட்டினால் பாலங்கள் கட்டுமானப் பணிகளில் பாலங்களின் மேற்தளத்திற்கான ஒரு Ready - Reckoner ஆகவும், மேற்தளத்திற்கான வடிவமைப்பு மற்றும் வரைபடம் தயாரிப்பதற்கான நேரம் தவிர்க்கப்படும், மாநிலம் முழுவதும், பால மேற்தள பணியில் சீரான அளவிலான Shuttering உபயோகிக்கப்படும், பால கருத்துருக்கள் தயாரிப்பது எளிதாகும், ஒரே பாலப் பணியில், தேவைப்படும் இடங்களில், பல்வேறு நீளமுள்ள மேற்தளங்களை கட்டுவதற்கு ஏதுவாக அமையும், போக்குவரத்து நெரிசலான பகுதிகளில் கட்டுமானத்தை துரிதபடுத்த Precast Superstructure வரைபடங்கள் மிகவும் உதவியாக இருக்கும்.

மேலும், நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றும் உட்கட்டுமானத்தை மேம்படுத்திட இதுபோன்ற தொழில் நுட்ப முயற்சிகளைத் தொடர்ந்து இந்த அரசு எடுத்துவருகிறது.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப் பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்கத் தமிழர் பேரவை –3 ஆம் ஆண்டு

# 'கருஞ்சட்டை' விருதுகள் வழங்கும் விழா!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் – விருதுகள் வழங்கிச் சிறப்புரை!

*சென்னை, ஜூலை 27-*

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் 3ஆம் ஆண்டு 'கருஞ்சட்டை' விருது வழங்கும் விழா இன்று (27.7.2024 - சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் தேனாம்பேட்டை - அன்பகத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன், தொல்காப்பியர் தமிழ்ச் சங்கத் தலைவர் புலவர் வெற்றியழகன், தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநிலச் செயலாளர் பொள்ளாச்சி மா.உமாபதி ஆகியோர் விருதுகளைப் பெறுகின்றனர்.

இவ்விழாவிற்கு செல்வின் சௌந்தரராஜன் தலைமை வகிக்கிறார்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் சுப.வீரபாண்டியன் நோக்கவுரையாற்றுகிறார்.

இரா.உமா வரவேற்புரையாற்றுகிறார்.

சிற்பி செல்வராஜ், எதிழ் இளங்கோவன், ஆ.சிங்க ராயர், பெல் ராஜன், மகாலட்சுமி, அ.இல.சிந்தா, ஷேக் தாவூத், லாரன்ஸ், காசு. நாகராஜ், முத்தையா குமரன், மு.மாறன், ப.புலேந்திரன், வேடசந்தூர் ரவி, சந்தானம், நெல்லை பாபு, பொற்கொடி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் 'கருஞ்சட்டை' விருதுகளை - போக்கு வரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்.

டாக்டர் கனிமொழி சோமு எம்.பி. வாழ்த்துரை வழங்குகிறார்.

எழுத்தாளர் சூர்யா சேவியர் பாராட்டுரை ஆற்றுகிறார்.

இராம.வைரமுத்து தொகுப்புரையாற்றுகிறார்.

ப.எட்வின் நன்றி கூறுகிறார்.

## அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்

# முதுநிலை மாணவர் சேர்க்கை!

## இன்று முதல் பதிவு செய்யலாம்!

*சென்னை, ஜூலை 27*

தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2024-25ஆம் ஆண்டிற்கான முதுநிலைப் பட்டப்படிப்பு முதலாமாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் 27/07/2024 முதல் பதிவு செய்யலாம். தாமாக இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள சேர்க்கை உதவி மையங்கள் (Admission Facilitation Centre - AFC) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இம்மையங்களின் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பக் கட்டணம் ஒரு மாணவருக்கு ரூ.58/ பதிவுக் கட்டணம் ரூ.2/ மட்டும். SC/ST பிரிவினருக்கு விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை. பதிவுக் கட்டணம் - ரூ.2/ மட்டும்.

**கட்டணம் செலுத்தும் முறை:**

விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தை விண்ணப்பதாரர்கள் Debit Card/ CreditCard/ NetBanking/ UPI மூலம் இணையதளம் வாயிலாக செலுத்தலாம்.

இணையதளம் வாயிலாகக் கட்டணம் செலுத்த இயலாத மாணாக்கர்கள் கல்லூரிச் சேர்க்கை உதவி மையங்களில் "The Director, Directorate of Collegiate Education, Chennai - 15" என்ற பெயரில் 27/07/2024 அன்று அல்லது அதற்குப் பின்னர் பெற்ற வங்கி வரைவோலை மூலமாக அல்லது நேரடியாகச் செலுத்தலாம்.

மாணாக்கர் சேர்க்கை வழிகாட்டி மற்றும் கால அட்டவணையை மேற்குறித்த இணையதளம் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

தொடர்பு எண்: 044 - 24343106 / 24342911

## சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வட கிழக்கு தி.மு.க. சார்பில்

# பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## சென்னை வடக்கு மாவட்ட கழகத்தினருக்கு ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் - தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து இன்று **(27-ம் தேதி சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில்** சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சென்னை கிழக்கு, - சென்னை வடக்கு, - சென்னை வடகிழக்கு, மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதில் சென்னை வடக்கு மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்க மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்நாடு சந்தித்த 2 தொடர் பேரிடர் இழப்புகள், மெட்ரோ ரயில் திட்டம் ஆகியவற்றிற்கு நிதி அவசியம் வழங்கிட வேண்டுமென்று **முதல்வர் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்** முன் வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை வாரி வழங்கியுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில், மாற்றாந்தாய் மனப்போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்துவரும் பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து, இன்று (27-ஆம் தேதி சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடத்திட வேண்டும் என்று தலைமைக் கழகம் அறிவித்ததற்கிணங்க,

சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று (27-ஆம் தேதி) காலை 10.00 மணியளவில் தயாநிதி மாறன், எம்.பி. அவர்களின் தலைமையிலும் டாக்டர்.கலாநிதி வீராசாமி, எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம், எம்.எல்.ஏ., ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ., அவர்களின் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் - மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாநில - மாவட்ட - பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் செயல்வீரர்கள் அனைவரும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பது "நமது கடமை நமது உரிமை" என்ற அந்த உணர்வோடு மாவட்டம் முழுவதிலும் இருந்தும் கழகத்தினர் அனைவரும் தமது கரங்களில் கழகத்தின் இரு வண்ணக்கொடியை ஏந்தி ஆயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்று, நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை தெற்கு மாவட்டம்,மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மண்டலம்11, வார்டு151ல்,லட்சுமி நகர் விளையாட்டு திடலில் மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஷ் மேம்பாட்டு நிதி ரூ.28 லட்சம் திட்ட மதிப்பீட்டில் புதிய நூலக கட்டிடம் அமைக்க மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி அடிகல் நாட்டினார். இந்நிகழ்வில் மண்டலம்XI குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன்,மண்டல அலுவலர்,நிர்வாக பொறுயாளர்,151வது வட்ட கழக அவைத் தலைவர் செ.இராமையா,வட்ட துணை செயலாளர்கள் கி.முரளி, கு.விமலாசேகர், வட்ட பொருளாளர் வி.பன்னிர்செல்வம்,வட்ட கழக பகுதி பிரதிநிதி கி. குமார், அணிகளின் துணை அமைப்பாளர் சண்முகம்,ஏ.பிரசாந்த், முன்னாள் பேரூராட்சி மன்ற உறுப்பினர் கிரிஸ்டி பெஃர்னான்டோ, லட்சுமி நகர் விரிவு நலச்சங்க தலைவர் பழனியப்பன் உள்ளிட்ட நிர்வாகிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள் லட்சுமி நகர் விஸ்வநாதன், ராமதாஸ், நா. சின்னய்யா,க. லோகேந்திர பாபு, அ.மதனகோபால், ஆட்டோ கிருஷ்ணன், கோவிந்தராஜ்,ஏ. செந்தில் குமார்,சீனு, தங்கராசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தமிழ்நாட்டில் பி.எஸ்.என்.எல். வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும்

# சிக்னல் - நெட்வொர்க் சிக்கல்களைத் தீர்க்க எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!

*புதுடெல்லி, ஜூலை 27-*

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் டெலிடென்சிட்டி தொலைத் தொடர்பு பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரிக்கவும், அதன் கீழ் வரும் நகர்ப்புற/கிராமப் பகுதிகளில் தடையின்றி 3ஜி/4ஜி/5ஜி இணைப்புகளை வழங்கவும் அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க.வின் வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் எம்பி கேள்வி எழுப்பினர்.

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் டெலிடென்சிட்டி தொலைத் தொடர்பு பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரிக்கவும், அதன் கீழ் வரும் நகர்ப்புற/கிராமப் பகுதிகளில் தடையின்றி 3ஜி/4ஜி/5ஜி இணைப்புகளை வழங்கவும் அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் என்ன?

கடந்த மூன்று வருடங்களில் லேண்ட்லைன் மற்றும் பிராட்பேண்ட் இணைப்புகளை சரண்டர் செய்த பழைய சந்தாதாரர்களுக்கு 'ரீஃபண்ட்' தொகையாக பெரும் தொகையை இன்னும் செலுத்த வேண்டிய BSNL ஏதாவது சிக்கலை எதிர்கொள்கிறதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் கடந்த மூன்று ஆண்டுகளில் BSNL சேவைகளை துண்டித்த மொத்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை; மற்றும் தமிழ்நாடு மாநிலத்தில் BSNL இன் வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் சிக்னல் மற்றும் நெட்வொர்க் சிக்கல்களைத் தீர்க்க BSNL ஆல் எடுக்கப்பட்ட / எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?



ஒன்றிய அரசின் தகவல் தொடர்பு மற்றும் ஊரக வளர்ச்சிக்கான ராஜாங்க அமைச்சர் டாக்டர் பெம்மாசானி சந்திர சேகர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்

வேலூர் மாவட்டத்தில் 4,301 பேஸ்டிரான்ஸ்ஸீவர் நிலையங்கள் (BTSs) 2G/3G/4G/5G மொபைல் இணைப்பை வழங்குகின்றன.

யுனிவர்சல் சர்வீஸ் ஒப்லிகேஷன் ஃபண்ட் (USOF) நிதியுதவியின் மூலம், நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மொபைல் நெட்வொர்க் கவரேஜை வழங்குவதற்காக 4G செறிவூட்டல் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.

4ஜி சாச்சுரேஷன் திட்டத்தின் கீழ், வேலூர் தொகுதியில் 14 தளங்களை பிஎஸ்என்எல் திட்டமிட்டுள்ளது.

லேண்ட்லைன் மற்றும் பிராட்பேண்ட் இணைப்புகளை ஒப்படைத்த BSNL சந்தாதாரர்களுக்கு நிலுவைத் தொகை கழித்த பிறகு திருப்பி அளிக்கப்படுகிறது. FTTHக்கு மாறப்பட்டால் பணத்தைத் திரும்பப் பெறுவது பொருந்தாது.

கடந்த மூன்று ஆண்டுகளில் BSNL பிராட்பேண்ட் மற்றும் FTTH துண்டிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

ஆண்டு 2021-22 ஆண்டு 33,56,639 அகன்ற அலைவரிசை மற்றும் FTTH 3,94,512 துண்டிக்கப்பட்டது.

2022-23 ஆண்டு 6,09,760 அகன்ற அலைவரிசை 6,02,306 FTTH துண்டிக்கப்பட்டது.

2023-24 ஆண்டு 11,23,005 அகன்ற அலைவரிசை 7,83,781 FTTH துண்டிக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.

## கழக விவசாய அணிச் செயலாளர்

# ஏ.கே.எஸ்.விஜயன் சகோதரி யமுனா அம்மையார் மறைவு!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – கழகத்தினர் அஞ்சலி!

*திருவாரூர், ஜூலை 27-*

கழக விவசாய அணி செயலாளரும், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே. எஸ். விஜயன் சகோதரி யமுனா அம்மையார் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அம்மையாரின் மறைவிற்கு தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த யமுனா அவர்கள், மருத்துவர் சம்பத்குமார் அவர்களின் மனைவியாவார். இவர்களுக்கு மூன்று மகன்கள். அதில் ஒருமகனான மருத்துவர் அரவிந்தன் மறைவெய்திவிட்டார். யமுனா அவர்கள் உடல்குறைவால் சென்னையில் சிகிச்சை பெற்றுவந்தார். இந்த நிலையில் சிகிச்சை பல



னின்றி நேற்று (26.07.2024) மறைவெய்தினார்.

கழக விவசாய அணி செயலாளரும், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே. எஸ். விஜயன் சகோதரியான மறைந்த யமுனா அம்மையார் அவர்களின் உடல் தஞ்சை மருத்துவக் கல்லூரி சாலையில் உள்ள ஈஸ்வரி நகரில் அவரது இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டு, இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அம்மையாரின் உடலுக்கு நாகை, திருவாரூர் மற்றும் தஞ்சை மாவட்டங்களை சேர்ந்த கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அம்மையாரின் இறுதி ஊர்வலம் இன்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 10.00மணிக்கு தஞ்சையில் நடைபெறுகிறது.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. அவசர செயல்வீரர்கள் கூட்டம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழிகாட்டுதலின்படி, பகுதி அவைத் தலைவர் ஏ.வீரபத்திரன் தலைமையில் அண்ணா படிப்பகத்தில் பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் பேசினார். இக்கூட்டத்தில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இக்கூட்டத்தில் தாம்பரத்தில் ஒன்றிய அரசை கண்டித்து நடைபெற உள்ள ஆர்ப்பாட்டம் குறித்தும் கழக வளர்ச்சி குறித்தும் ஆலோசனை நடைபெற்றது.